DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 75/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : முத்துராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th **June 2025.**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் கரிவலம்வந்தநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 10 வருடத்திற்கு ஒருநாள் கோவிலான்குளம் காவல்நிலையம் சென்றிருந்தேன். எனது சித்தி கடலாட்சியை எதிரி அடித்துவிட்டதாக காவல்நிலையம் சென்றிருந்தபோது போலீசார் கேட்டுக் கொண்டதால் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 06.12.2013 ம் தேதி 19.00 மணிக்கு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், முருகன் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் போலீசார் விசாரணையின்போது முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் கூறினேன் என்றால் சரிதான்.